# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1882/2 - 2014 සැප්තැම්බර් මස 29 වැනි සඳුදා - 2014.09.29

*1882/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அத்துடன் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியானது எஹலியகொடை நகர அபிவிருத்தி செயல்திட்டத்திற்கு, எஹலியகொடை நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உடனடியாகத் தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2014, செத்தெம்பர் 19.*

**அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவின், எஹலியகொடை பிரதேச சபை எல்லையுள்ளான, குருவிற்ற கோறளை பல்லேபத்து சிறிய பிரிவிலான, கெந்தன் கமுவை இஹலகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், 30.08.2013 ஆந் திகதியிடப்பட்டு சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட முன்னீட்டுச் சுவடி இல.:* R/EHL/ *2013/199 இல் காட்டப்பட்ட காணித்துண்டு* "A" *ஆனது 0.1831 ஹெக்டெயார் (00ஏ. 01றூ. 32.37 பேர்ச்.) விஸ்தீரணத்தைக் கொண்டு பின்வருமாறு சூழப்பட்டுள்ளது.*

***காணித் துண்டு இல.* A:**

வடக்கு : *புகையிரத பாதை ஒதுக்கீடு ;*

கிழக்கு : *வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச சபை வீதி ;*

தெற்கு : *பிரதேச சபை வீதி ;*

மேற்கு : *பிரதேச சபை வீதி மற்றும் புகையிரதப்பாதை ஒதுக்கீடு.*

*10- 525*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.